
பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 02 | வெள்ளிக்கிழமை | 14.02.2025 | அதிர்வு 196

## பாரதியின் புகழுடல் தீயுடன் சங்கமம்!



(எஸ்.நிதர்ஷன்)

சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் இறுதிச் சடங்கு நேற்று வியாழக்கிழமை 02▶



### இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும்

# ஜூலி சங்கை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைக்குக!

**அந்நாட்டு ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவிப்போம் என்கிறார் சரத் வீரசேகர**

“இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். அரகலய போராட்டக் காலப் பகுதியிலும் அவர் முறையற்ற வகையில் செயற்பட்டார். அவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவிப்போம்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார். 06▶

# செம்மணியில் மீண்டும் மனிதப் புதைகுழியா?

## மீட்கப்படும் எலும்புக்கூடுகளால் மக்கள் அச்சம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்படுவது பல்வேறு சந்தேகங்களையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

இந்த மயானத்தில் நல்லூர் பிரதேச சபையால் மின் தகன எரியூட்டி அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய மயானத்துக்குள் கிடங்குகள் வெட்டியபோது இந்த எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் 06▶




நேற்று இரவு சட்டத்துறையுடன் தொடர்புடைய நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார்.

நேற்றைய ‘மாலை முரசு’ பத்திரிகையின் முன் பக்க வடிவமைப்பு தொடர்பில் குறை கூறினார்.

“தமிழரசுக் கட்சியின் வழக்குப் பற்றிய செய்தியை முன் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக பிரசுரித்திருக்கிறீர்கள். ஏதோ வழக்கு சிறிதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலானது என்பது போல இருவர் படங்களையும் எதிர் எதிராகப் பிரசுரித்து ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்த முயன்றிருக்கிறீர்கள். அது தவறானது.” – என்றார் அந்த சட்டத்துறை நண்பர்.

நான் ஆரம்பத்தில் அவரது கருத்தை எடுத்த எடுப்பில் மறுக்கவில்லை. அவரது கருத்துக்கு இணங்குபவர் போல சிரித்தேன். எனினும் சற்று அவரைப் பேச விட்டு பின்னர் என் விளக்கத்தை அளித்தேன்.

“நீங்கள் சொல்வது சரிதான். வழக்கு சிறிதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலானது 06▶

# பாரதியின் புகழுடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்று புகழுடல் யாழ். கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தமிழ் ஊடகப் பரப்பில் 40 வருடங்களுக்கு மேல் ஊடக அனுபவத்தைக் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி உடல் நலக் குறைவு காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

யாழ்ப்பாணம் – பலாலி வீதியில் திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நேற்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள், சமூகச் செயற்பட்டாளர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பாரதிக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் அஞ்சலி உரைகளும் வழங்கினர்.

அதன்பின்னர் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று புகழுடல் தகனக்கிரியைகளுக்காக மதியம் 1.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.






















# மத்திய அதிவேக வீதியின் நிர்மாணப்பணி ஆரம்பம்

நிறுத்தப்பட்டுள்ள மத்திய அதிவேக வீதியின் முதல் கட்ட நிர்மாணப்பணிகள் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் மீள ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அதற்கான கடன் தவணைக்கு சீனாவின் எக்ஸிம் வங்கியின் அனுமதியை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீனாவிற்கான விஜயத்தின் போது இடம்பெற்ற கலந்துரையாடலின் பயனாக குறித்த நிர்மாணப்பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய அதிவேக வீதியின் முதல் கட்டம் கடவத்தை தொடக்கம் மீரிகம வரையில் அமைந்துள்ளது. இது 37 கிலோ மீற்றர் நீளம் கொண்டதாகும். இதுவரை 20 வீத நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

மத்திய அதிவேக வீதியின் மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக திட்டப் பணிப்பாளர், பொறியியலாளர் அநுராத ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

2026 ஆம் ஆண்டுக்குள் இதனை மக்களிடம் கையளிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

மத்திய அதிவேக வீதியில் பொத்துஹர முதல் கலகெதர வரையிலான பகுதி மூன்றாம் கட்டத்திற்கு உரித்தானதாகும். இதன் நீளம் 32.5 கிலோ மீற்றர்களாகும்.

அதன் நிர்மாணப்பணிகள் உள்நாட்டு பொறியாளர்கள் மற்றும் உள்நாட்டு நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக பொத்துஹர முதல் இரம்புக்கனை வரையிலான 13.5 கிலோ மீற்றர் நீளமான பகுதி மக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக அநுராத ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# புற்றுநோயால் வருடாந்தம் 250 சிறார்கள் உயிரிழப்பு



வருடாந்தம் 1200 சிறுவர்கள் புற்றுநோயுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர், நிணநீர் சுரப்பி புற்றுநோய், எலும்பு புற்றுநோய் மற்றும் மூளை புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என தேசிய புற்றுநோய் ஒழிப்பு திட்டத்தின் சமூக விசேட வைத்திய நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்களில் வருடாந்தம் சுமார் 250 சிறார்கள் உயிரிழக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# வரவு - செலவு திட்டத்தை தயாரிப்பதற்கான இறுதி கட்ட உத்தியோகபூர்வ கலந்துரையாடல்

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் தயாரிப்பதற்கான இறுதிக் கட்ட உத்தியோகபூர்வ கலந்துரையாடல், நேற்று பிற்பகல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்க அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்படி, தயாரிக்கப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.









# மொழிபெயர்ப்பாளர்கள் குழுவை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை

இலங்கையிலுள்ள அரச நிறுவனங்களுக்காக விசேட மொழிபெயர்ப்பாளர் குழுவை உருவாக்க தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச நிறுவனங்களில் சேவைகளை பெற்றுக்கொள்ள வருகை தரும் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதி அமைச்சர் முனீர் முலாபர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அரச சேவையில் பல்வேறு மொழித்திறன் கொண்ட தொழில் வல்லுநர்கள் உள்வாங்கப்படவுள்ளனர் என பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




# வியட்நாம் பிரதிப் பிரதமருடன் ஜனாதிபதி அநுர கலந்துரையாடல்

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான ஒத்துழைப்பையும் நட்புறவையும் மேலும் பலப்படுத்திக்கொள்வதற்கு வியட்நாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள தயாராக இருப்பதாகவும் வியட்நாம் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான புய் தான் சன் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 2025 உலக அரச உச்சி மாநாட்டில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 55 வருடங்களாக வியட்நாமிற்கும் இலங்கைக்கும் இடையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் அரசியல் நம்பிக்கை மற்றும் நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை சாதகமாக மேம்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான நீண்டகால பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்திக் கொள்வதற்கு இரு நாடுகளுக்கும் போதிய வாய்ப்புக்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி , விவசாயம், கல்வி, மதம், கலாச்சாரம், சுற்றுலா மற்றும் விமான சேவைகள் போன்ற துறைகளில் இலங்கையில் முதலீடு செய்ய வியட்நாம் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.





# மின்வெட்டு தொடர்பில் இன்று காலை அறிவிப்பு

இன்று மின்வெட்டு ஏற்படுமா, இல்லையா? என்பது தொடர்பான அறிவிப்பு இன்று காலை வெளியிடப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலையின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, இன்று முடிவு எடுக்கப்பட உள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக, நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தில் உள்ள மூன்று மின் பிறப்பாக்கிகள் செயலிழந்திருந்தன.

இதன் விளைவாக, மின்சார தேவையை நிர்வகிக்க முடியாததால், திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் ஒன்றரை மணி நேர மின்வெட்டை அமுல்படுத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்தது.

இருப்பினும், பௌர்ணமி தினம் என்பதால் நேற்று முன்தினம் மின்வெட்டு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.



இருப்பினும், தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு நேற்று ஒரு மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அல்ல. இருவருமே வழக்கின் எதிராளிகள். கட்சியின் உறுப்பினர் ஒருவர் கட்சியின் நிர்வாக கட்டமைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கு இது.ஆகையினால் சிறிதரன் – சுமந்திரன் ஆகிய இருவருக்கும் இடையிலான வழக்கு போல அந்த பக்க வடிவமைப்பின் 'கென்செர்ப்ட்' அமைந்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதுதான். ஆனால் வழக்கு நேற்றைய தினம் அந்த இருவருக்கும் இடையிலான விவகாரமாகத்தான் பேசப்பட்டிருக்கின்றது. வழக்கை இணக்கமாகத் தீர்த்து வைப்பதற்கான வாய்ப்பு




கள் குறித்து ஆராய்வதற்கே நேற்று வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்படி இணக்கமான தீர்வு காண்பதற்கு கட்சியின் மத்திய குழு ஒரு முடிவை எடுத்து சிறிதரன், சுமந்திரன் உட்பட வழக்கில் எதிராளிகள் அனைவருக்கும் ஒரு வழிகாட்டலை வழங்கி இருந்தது. அந்த வழிகாட்டலுக்கு முரணாக சிறிதரன் தரப்பைச் சேர்ந்த சிறிதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகியோரும், கட்சியின் மத்திய குழுவின் அந்த வழிகாட்டல்படி சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம் ஆகியோரும் நிலைப்பாடு எடுத்து நேற்று நீதிமன்றத்தில் வாதங்களை முன் வைத்தனர். வழக்கு என்னவோ கட்சியின் ஓர் உறுப்பினருக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும் இடையிலானது என்றாலும், நேற்று இணக்கத் தீர்வுக்கான விவகாரத்தில் விடயம் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக முடிவெடுத்த சுமந்திரன் தரப்புக்கும் அந்த தீர்மானத்திற்கு இணங்காத வகையில் நிலைப்பாடு எடுத்த சிறிதரன் தரப்புக்கும் இடையிலான விவாதமாகவே நடைபெற்று முடிந்திருக்கிறது. அதனை நேற்றைய மாலை முரசு செய்தி தெளிவுபடுத்தியும் இருக்கின்றது. அந்தச் செய்திக்கூடாக கூறப்பட்ட விடயத்தை பிரதிபலிக்கும் விதத்திலேயே நேற்று மாலை முரசு முதல் பக்க செய்திக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டிருந்தது." – என்று நான் விளக்கம் அளித்தேன்.

அந்த விளக்கம் அவருக்கு ஏற்புடையதாக இருந்ததா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆயிலும் அந்த விளக்கத்தை வாசகர்களுடன் பகிர வேண்டும் என்று நினைத்தேன். அதனால் தந்திருக்கிறேன்.

எது, எப்படி என்றாலும் இந்த வழக்கில் இணக்கத்தீர்வு – சமரசம் – ஏற்படுவதாயினும் அதற்கும் காலம் அதிகம் இழுபடும் என்ற என்னுடைய நிலைப்பாடு – நான் எழுதி வந்த கருத்து – மென்மேலும் உறுதியாகி வருகின்றமையை நேற்றைய இந்த நீதிமன்றச் செய்தியும் பிரதிபலித்து நிற்பதை மறுக்க முடியாது.

## காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்திலிருந்து விலகும் இந்தியாவின் அதானி நிறுவனம்




இலங்கையின் காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தில் இருந்து விலகுவதாக இந்தியாவின் அதானி நிறுவனம் அறிவித்துள்ளதாக றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் நிறுவனம் இலங்கையில் உத்தேசிக்கப்பட்ட 2 காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்களில் இருந்து விலகுவதாக அந்நிறுவனம் இலங்கை முதலீட்டு சபையின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டங்களினூடாக மின்சார செலவைக் குறைப்பதற்கு அதானி குழுமத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை அரசாங்கம் கடந்த மாதம் அறிவித்தது.

---

## ஜூலி சங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் பிரிவினைவாதத்துக்கு எதிரான கூட்டணியினர் கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இலங்கையின் இறையாண்மைக்கும்,சுயாட்சிக்கும் சவால் விடுக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். அத்துடன் வியன்னா ஒப்பந்தத்தையும் மீறியுள்ளார்.

எமது அரசுக்கு எதிரான போராட்டத்தின் போது அமெரிக்கத் தூதுவர் முறையற்ற வகையில் செயற்பட்டார். பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டார். அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார். ஆகவே, இவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம்.

பாலினம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனம் பல மில்லியன் டொலர்களைச் செலவழித்துள்ளது என்று அமெரிக்காவின் புதிய அரசு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் கலாசாரத்தைச் சீரழிப்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்த விடயம் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், நிதி பெற்றுக்கொண்டவர்களின் விவரங்களைப் பகிரங்கப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்." – என்றார்.

---

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியவருவதாவது,

சித்துப்பாத்தி இந்து மயானத்துக்குள் மின் தகன எரியூட்டி அமைப்பதற்கான பணி நல்லூர் பிரதேச சபையால் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எரியூட்டி அமைப்பதற்காகக் கிடங்கு வெட்டியபோது மண்டையோடு உட்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து ஒப்பந்தக்காரர்களால் நல்லூர் பிரதேச சபைக்கு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சம்பவ இடத்துக்கு

வருகை தந்த பிரதேச சபைச் செயலர் உள்ளிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சித்துப்பாத்தி மயான அபிவிருத்திப் பணி உறுப்பினர்கள் ஆகியோர் மனித எலும்புக்கூட்டு எச்சங்களைப் பார்வையிட்டனர்.

எனினும், மின் தகன எரியூட்டி அமைப்பதற்கான வேலைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஒப்பந்தக்காரர்களுக்குப் பிரதேச சபைச் செயலர் உள்ளிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில், இந்து மயானத்துக்குள் மனித எலும்புக்கூடுகள் காணப்படுவதால் தம்மால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாது என்று ஒப்பந்தக்காரர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து ஒப்பந்தக்காரர்களுடனான ஒப்பத்தத்தை இடைநிறுத்திய பிரதேச சபை செயலாளர், மயான அபிவிருத்தி சபையிடம் இது குறித்து தெரிவித்ததுடன் குறித்த ஒப்பந்தத்தின் தொடர் பணிகளை முன்னெடுக்குமாறு கேட்டுள்ளார்.

இதனால் அச்சமடைந்த மயான அபிவிருத்திக் குழுவினர் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆலோசித்து வருகின்றனர்.

அந்தப் பகுதியில் மூன்று குழிகள் வெட்டப்பட்ட நிலையில் இரண்டு குழிகளில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் அவதானிக்கப்பட்டதையடுத்து ஒப்பந்தக்காரர்கள் தங்கள் பணிகளை நிறுத்தியுள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் மீட்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் செம்மணிப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் அல்லது புதைக்கப்பட்ட கிறிஸ்தவர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகங்களும் வெளிப்படுத்தபடுகின்றன.

இந்த மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் எப்படி எங்கிருந்து வந்தன என்பது தொடர்பில் பலரும் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி வருகின்றனர்.

# மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நீர் வெட்டு





முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் விஜேராமவில் உள்ள உத்தியோகப்பூர்வ இல்லத்திற்குப் பின்னால் பாதுகாப்புப் படையினர் தங்கியிருந்த வீட்டில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் 300,000 ரூபா நீர் கட்டணத்தை செலுத்தாதன் காரணமாக குறித்த வீட்டிற்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு காவலர்கள் தங்கியுள்ள வீட்டிற்கான நீர் கட்டணம் ஜனாதிபதி செயலகம் மூலமாக செலுத்தப்படுவதாக சட்டத்தரணி மனோஜ் கமகே மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில், சம்பந்தப்பட்ட நீர் கட்டணங்கள் சில மாதங்களுக்கு முன்பு செலுத்தப்பட்டவை என்று கூறிய முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர், அந்த நேரத்தில் அவ்வீட்டில் 160 பாதுகாப்புக் காவலர்கள் இருந்ததால், இவ்வளவு நீர் கட்டணத்தைப் பெறுவது நியாயமானது எனத் தெரிவித்தார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தங்கியுள்ள பகுதிக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# வருடத்தின் இதுவரையான காலத்தில் 5591 டெங்கு நோயாளர்கள் பதிவு

நாட்டின் 17 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

பெரும்பாலானவர்கள் கொழும்பு, கம்பஹா, கண்டி, மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 5591 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் நாட்டின் 74 வைத்தியசாலைகளில் 342 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஊசலாடும் தேர்தல்!

உள்ளூராட்சித் தேர்தல் உடனடியாக நடைபெறும் அல்லது உடனடியாக நடைபெறாது என்ற இழுபறி, ஊசலாட்டம் போல இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக அல்லாடுகின்றது.

2023 முற்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில், அந்த வேட்பு மனுக்களை ரத்து செய்துவிட்டு, புதிதாக வேட்பு மனுக்களைக் கோரி, தேர்தலை நடத்துவதற்கு வழி செய்யும் சட்டமூலம் ஏற்கனவே வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு விட்டது. அது தொடர்பில் பொதுமக்களினால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைகள் மீது உயர்நீதிமன்றம் விசாரணை நடத்தி தனது முடிவை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பிவிட்டது என தெரிகிறது.

உயர்நீதிமன்றத்தீர்ப்பை அறிவிப்பதற்காக நாடாளுமன்றம் இன்று விசேடமாகக் கூட்டப்படுகின்றது.

அதன் பின்னர் வரும் திங்களன்று நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தை நிதி மந்திரி என்ற முறையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சமர்ப்பித்த பின்னர், அன்று மாலை நாடாளுமன்றம் மேற்படி உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை அங்கீகரிப்பதற்காக விசேடமாக கூடுகின்றது.

இப்படி அவசர அவசரமாக சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் வரும் ஏப்ரல் 17 அல்லது 24 ஆம் திகதியில் இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு கங்கணம் கட்டி ஆளும்தரப்பு செயற்பட்டு வருகின்றது என்பது கண்கூடு.

எப்படித்தான் வேகப்படுத்தியும், சட்டத்தை அவசரம் அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, நடைமுறைப்படுத்தினாலும் தேர்தலை அறிவிக்கும் தீர்மானம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்குத்தான் உண்டு.

இயன்ற விரைவில் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று ஆளும் தரப்பின் - அரசின் - நிலைப்பாட்டை தேர்தல் ஆணையம் புரிந்து கொண்டு தானாகவே அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்த போதிலும், அந்த நிலைமைக்கு பிரதான எதிர்க்கட்சிகள் இப்போது 'செக்' வைத்து விட்டன என்று தெரிய வருகின்றது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான திருத்தச் சட்டத்தை ஆளுந்தரப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து 17ஆம் திகதி நிறைவேற்றினாலும் - அந்தச் சட்டம் உடனடியாக அடுத்து வரும் தினங்களில் நடைமுறைக்கு வந்தாலும் - தேர்தல் எப்போது என்று தீர்மானித்து அறிவிக்கும் பொறுப்பு சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவையே சேர்ந்தது.

தேர்தல் நடத்தும் அதிகாரம் சட்டரீதியாகத் தமக்கு வந்து, மூன்று மாத காலத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான ஒரு திகதியை தேர்தல் ஆணையம் தீர்மானிக்க முடியும்.

இப்போது இந்தத் தேர்தல் சட்டமூலத்தை நிறைவேற்றினாலும் வரும் மார்ச் 21 ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான முதலாம், இரண்டாம் வாசிப்புகள் மற்றும் குழுநிலை விவாதங்கள் தொடர்ந்து இடம்பெறப் போகின்றன.

அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் வரவு - செலவுத் திட்ட விவாதம் என்ற நாட்டின் முக்கியமான விடயத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும்போது நாடு முழுவதும் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட முடியாது என்பதை 13 எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கடிதம் ஒன்றின் மூலம் தேர்தல் ஆணையத்துக்கு சுட்டிக்காட்டி இருக்கின்றன.

இந்தக் கடிதத்தின் நியாயபூர்வமான தன்மையை உள்வாங்கித் தேர்தல் ஆணையம் சுயாதீனமாக முடிவெடுக்காவிட்டால் அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்துக்குப் போகக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

இந்தப் பின்புலத்தில் விடயங்களை சீர்தூக்கிப் பார்த்து நியாயமான தீர்மானத்தை எடுக்க வேண்டிய கடப்பாடு தேர்தல் ஆணையத்துக்கு உண்டு.

வரவு - செலவுத் திட்டம் மீதான நாடாளுமன்ற விவாதங்கள் ஒருபுறம் நடக்க, மறுபுறம் தேர்தல் பிரசாரம் என்பது சாத்தியமற்றது என்ற எதிர்க்கட்சிகளின் நியாயமான நிலைப்பாட்டை தேர்தல் ஆணையம் சாதகமாகப் பரிசீலிக்குமானால் உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பும், பிரசாரத்துக்கான கால அவகாசமும் தள்ளிப் போகக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

அதனால் அரசு எதிர்பார்ப்பது போல ஏப்ரல் 17 அல்லது 24 ஆம் திகதியில் தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு, அது தள்ளிப் போகும் விதத்தில் தேர்தல் ஆணைய அறிவிப்பு வெளியாக வாய்ப்புகள் உள்ளன.



# ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு திரும்பினார் ஜனாதிபதி அநுர

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான 3 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று காலை நாடு திரும்பினார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது, டுபாயில் நடைபெற்ற உலகத் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டில் பங்குபற்றிய முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பல தரப்பினருடன் ஜனாதிபதி கலந்துரையாடலில் ஈடுபட்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கடந்த 10 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.











# மனம் மறந்து விடாத அலைபாயும் ஒரு தினம்!



நடராஜன் ஹரன்

இளசுகளின் மனம் மறந்தவிடாது அலைபாயும் ஒரு தினம் என்றால் பெப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தினம்! "காதலர் தினம்" மேற்கத்திய உலகில் கலாசாரத்தின் சிந்தனையால் உருவான தினம்!

இரவு பன்னிரெண்டு மணிக்குக் காதலர்கள் ஒன்று கூடி முத்தமிடுவதும் பூச்செண்டுகளை பறிமாறுவதும் பரிசில்களை கொடுப்பதும் உல்லாசமாக ஊர்சுற்றுவதும் மிகப்பெரிய நாகரீகம். நாளொருவண்ணம், பொழுதொரு மேனியாக ஆண், பெண் உறவு (காதலன், காதலி உறவு) மாறிக் கொண்டேயிருக்கும்.

தந்தை தினம் வருகிறது பல பேர்களுக்கு அது வந்து போவதே தெரிவதில்லை. தாய் தினம் வருகிறது. கொஞ்சம் தொலைக்காட்சி மூலமாய் தெரிந்தாலும் 'அம்மாவென்றழைகாத உயிரில்லையே' என்பது போல் ஒரிரண்டு பாட்டுக்களுடன் முடிவடைகின்றன.

நம் நாட்டின் சுதந்திரத்துக்காக உயிரையும் அர்ப்பித்த பல தியாகிகளின் பிறந்த நாள்கள் பலருக்கு நினைவு வருவதில்லை. ஆனால், இந்தக் காதலர் தினம் மட்டும் ஒரு பத்து நாள்கள் முன்பாகவே சூடு பிடிக்கத் தொடங்கி ஒரு கலக்கல் கலக்கி விடுகிறது. அது ஏன்? ஏழு வயது சிறுவனும் கூட இதைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறான்.

ஒரு சிறுமி தன் தாயிடம் தனக்கு ஒரு பெல்ட் வாங்கும்படி அடம் பிடித்தாள். உனக்கு எதற்கு பெல்ட்? என்று அவள் அம்மா கேட்டபோது, எனக்கில்லையம்மா என் பாய் பிரண்டுக்கு, "காதலர் தினத்தில் கொடுக்கணும்" என்றாள்.

அன்புடன் பரிசு கொடுப்பதில்லை தவறொன்றுமில்லை. ஆனாலும் ஒரு வரையறை மீற அங்கு அமிர்தமும் விஷமாகிவிடுகிறது. சிறுமியைச் சொல்லிக் குற்றமில்லை. அவள் வளரும் சூழ்நிலை அவளைச் சுற்றியிருக்கும் சூழ்நிலை எல்லாம் சேர்ந்து இது போன்ற நிலை உண்டாகிறது.

நம் நாடு பெற்றோர்களைத் தெய்வமாக மதிக்கும் நாடு. தாய் தந்தையைப் பராமரித்து கடைசிவரை அவர்களைப் பாசத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்களின் கடமை. ஆகையால் தனியாக தாய், தந்தை தினம் தேவையே இல்லை. நம் மனத்தில் தினமும் அவர்கள் குடியிருக்கிறார்கள். மேல் நாட்டில் மகன், மகள் 16 வயது வந்தால் தனியாகக் குடி போகிறார்கள். அவர்கள் சுதந்திரத்தில் ஒருவரும் தலையிடுவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆகையால் இந்தத் தந்தை தினம், தாய் தினம் என்று அவர்களுக்காக ஒரு நாள் ஒதுக்குகிறார்கள். இந்தத் தினம் அன்பை வெளிப்படுத்தவே.

இந்தக் காதலின் அர்த்தத்தை நம் நாட்டில் தவறாகப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்ற ஐயம் மனதில் உண்டாகிறது. இந்தப் புனிதக் காதல் பிறந்த கதையைப் பார்த்தால் ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்துக் கொள்ள முடியும்.

மூன்றாம் நூற்றாண்டில் கிளாடியஸ் என்ற கொடுமை அரசன் தன் சேனையில் நிறைய பேர்கள் சேர ஒரு சட்டம் கொண்டு வந்தான். அதாவது கல்யாணம் ஆகாதவர்கள்தான் சேனையில் சேர முடியும். அங்கிருந்த வலன்ரைன் என்பவருக்கு இந்தச் சட்டம் பிடிக்கவில்லை. அவர் அரசனுக்குத் தெரியாமல் பல காதலர்களுக்குத் திருமணம் நடத்தி த்தார். இது அரசனுக்குத் தெரிந்து, பின் அந்த நல்லவர் பிடிப்பட்டு மரண தண்டனையும் பெற்றார்.

எல்லோரும் கருணையுடனும் பாசத்துடனும் அவரை வந்து பார்த்தார்கள். ஜெயிலின் அதிகாரியின் சிறு மகள் அவர் மேல் மிகவும் அன்பு காட்டினாள். பெப்ரவரி 14 ஆம் திகதி அவருடைய கடைசி நாளென்று அந்தச் சிறு பெணணுக்கு ஒரு சின்னக் குறிப்பு எழுதிவைத்துவிட்டு மரண தண்டனையையும் ஏற்றுக் கொண்டார்.

அந்த நாளில் இருந்து இந்தக் காதல் பறிமாற்றம் அவர் ஞாபகமாக நடக்கிறது. ஒரு பூக்களின் மூலமாகவோ, பொருள்களின் மூலமாகவோ இதை வெளிப்படுத்துகின்றனர்.

உலகம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை பெண்ணின் கற்பைப் பற்றித்தான் இந்தச் சமூகம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. கற்புக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் ஏதாவது செயற்பாடுகள், அல்லது பேச்சுகள் இருந்தால் அது பெண்ணின் வாழ்க்கையே கேள்விக் குறியாக்கிவிடும்.

கற்பு என்பது புனிதமானது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. இருவரும் கற்பைப் பாதுகாக்க வேண்டும் என்று அனைத்து மதங்களும் கூறுகின்றன. அந்த நாளில் காதலர்கள் மற்றும் தம்பதியர் வாழ்த்து அட்டை, சாக்லேட், பரிசு, முத்தம் என சகலத்தையும் பரிமாறிக்கொள்வது வாடிக்கை.

நம் எண்ணங்களையும், ஆசைகளையும், கனவுகளையும், தாபங்களையும், எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்துகொள்ள ஒரு காதலி அல்லது காதலன் கிடைத்துவிட்டால், வாழ்க்கை முழுமையாகிவிடும் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள்.

வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவர்



தொடர்ச்சி▼

# மனம் மறந்து விடாத அலைபாயும் ஒரு தினம்!

தொடர்ச்சி▲

களுக்கே காதலின் சக்தி புரியும். ஒருவருக்கொருவர் உடமையாவதும், உரிமை கொண்டாடுவதும், ஆளுமை செலுத்துவதும் அல்ல காதல். இரு உள்ளங்கள் சங்கமிக்கும் நிகழ்வு.

அது உண்மையில், காதலுக்காகச் சுயநலத்தையும், அகந்தையையும் இழப்பதில்தான் வாழ்க்கையின் இரகசியமே அடங்கியிருக்கிறது. காதலின் ஆச்சரியங்களில் ஒன்று சரணாகதி. எல்லாவற்றையும் காதலுக்கு அர்ப்பணிக்கும்போது காதலர்கள் புதுப்பிறவி எடுக்கிறார்கள். இதைப் புரிந்தவர்கள் புளகாங்கிதம் அடைகிறார்கள். தோற்றவர்கள் சபிக்கிறார்கள்.

ஒரு ஆணும், பெண்ணும் வாழ்க்கைப்பந்தம் ஏற்படுத்தி, ஒருவருக்கு ஒருவர் என வாழ, மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபட, அன்பின் அடிப்படையில் உருவான பந்தம்தான் காதல். ஆனால் இனக்கிளர்ச்சியை காதல் என உள்ளர்த்தம் செய்து கொண்டு இளைய சமுதாயம் பயணித்து வருகிறது. தமக்கு 'பாய் பிரண்ட்', 'கேர்ள் பிரண்ட' இல்லை என்றால், நண்பர்கள் மத்தியில் சமூக அங்கீகாரம் கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் காதல் உருவாகி வளர்ந்து வருகிறது. இது திருமணம் வரை செல்வதில்லை. ஆபத்தில்லாமல் இருக்கும்வரை இந்தக் காதலை கண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம். கதையில், கவிதையில், சினிமாவில் ரசிக்க மட்டுமே இவ்வகை காதல். இவை வாழ்வின் கனவுக் காட்சிகள் ஆனால், வாழ்க்கைக்கு உதவாது.

வாழ்க்கை என்பது ரியாலிட்டி. காதல் உணர்வை இயற்கை அளித்திருந்தாலும், அறிவைக் கொண்டு ஆராய்ந்து வாழ்க்கை முழுவதும் நிலையான இன்பம் துய்க்க ஏற்றவாறு முறைப்படுத்திக் கொள்வது அவசியம். ஆணோ, பெண்ணோ பொருளாதார சுதந்திரம் பெற்ற பின் காதலியுங்கள். அப்போது உங்களுக்கு ஓரளவு அனுபவம் ஏற்பட்டிருக்கும்.

திருமணம் ஒரு முடிவு அல்ல, ஆரம்பம் என்கிற நம்பிக்கை வந்தால் திருமணத்துக்குப் பிறகும் காதலைத் தொடர முடியும். திருமணத்துக்கு முந்தைய காதலும், பிந்தைய காதலும் ஒன்று என்கிற தவறான எண்ணம்தான் பிரச்சினைக்குக் காரணம். தற்போதுள்ள பணிச்சுமை, பொருளாதார நெருக்கடி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமைதான் காதல் மணமுறிவுக்கு அடிப்படைக் காரணம். கணவன், மனைவியான பிறகு தங்களின் மன அழுத்தங்களையும் வெறுப்புகளையும் வெளியேற்றும் வடிகாலாக ஒருவரை ஒருவர் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இவ்வாறு செய்வது காதலுக்கு தரும் மரியாதை அல்ல. சுதந்திரமான 'ரொமான்டிக்' காதல் வேறு. இல்லறத்தில் புதுப்பிறவி எடுக்கும் காதல் வேறு என்பதைப் புரிந்துகொண்டாலே உங்கள் வாழ்க்கையில் குளிர்ச்சியான தென்றல் வீசும். நம் நாட்டுக் கலாசாரம். காதலைப் புனிதமாக மதிக்கிறது. இலை மறைவு, தலை மறைவு என்பார்கள். ஆரோக்கியமாக உண்மையான அன்பை தன்னலமில்லாத அன்பைச் செலுத்திக் கொண்டாட அதைவிடச் சிறந்தது வேறில்லை.

இறைவனும் அன்புக்கு அடிமை. எனவே எதிர்ப்பார்ப்பு இல்லாத அன்பை வாரி வாரி வழங்குவோம். உண்மைக் காதலுக்கு நாமும் காட்டுவோம். பச்சைக் கொடி அன்பை பரிமாறுவோருக்கு எமது காதலர் தின நல் வாழ்த்துகள்.





# வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என ஆளுநர் உறுதி

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தகவல்

**(கி.வசந்தன்)**

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம் உறுத்தியளித்துள்ளார் எனத் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநருக்கும், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடக்கு மாகாணத்தின் வலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதிநிதிகள் உட்பட இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் அமைப்பாளரும், பிரதி அமைச்சருமான சுந்தரலிங்கம் பிரதீப், அத்தோடு வடக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் பிரதாஸ் உட்பட உறுப்பினர்கள் வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது ஆசிரியர்கள் இடமாற்றம், ஆசிரியர்கள் இடமாற்றத்தின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள், ஆசிரியர் நலன்புரி செயற்பாடுகள் மற்றும் அதிபர் சேவையில் உள்ள பிரச்சினைகள், அதிபர் சேவை நியமனத்தின்போதுகாணப்பட்டபிரச்சினைகள்என்பன இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கான நடவடிக்கைகள் எடுக்படவுள்ளன என ஆளுனர் வாக்குறுதியளித்திருந்தார். அத்தோடு பல்வேறு பிரச்சினைகளும் எமது பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன. அவற்றை சாதகமான முறையில் தீர்த்து வைப்பார் என ஆளுநர் கூறினார்.

இந்த கலந்துரையாடல் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும் என ஆளுநர் கூறியிருந்தார். எதிர்காலத்தில் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்படும். இதன் மூலம் வடக்கு மாகாண கல்வியில் உள்ள பல பிரச்சனைகளை தீர்க்க முடியும். – எனத் தெரிவித்தார்.





# வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி அழகியவண்ண உள்ளிட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு வவுனியாவில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தற்போது நாடு முழுவதும் பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் கடந்த காலத்தில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய நிர்வாகப் பிரிவு பொறுப்பதிகாரி, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு



பொறுப்பதிகாரி, புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பல பதவி நிலைகளை வகித்து, தற்போது வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செற்படும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாகவும் செயற்பட்ட அழகியவண்ணவுக்கு நேற்று முதல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தமண பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரியாக அவர் இடமாற்றப்பட்டுள்ளார்.

நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே. திவுல்வெவ அநுராதபுரம் பொலிஸ் நிலையத்திற்கும், உளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கல்கிஸைப் பொலிஸ் நிலையத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

# கிழக்கில் 3,500 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நியமனம்!

## வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆளுநர் தெரிவிப்பு



(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 500 மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நிரப்புவதற்கு நிதி அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளோம். அவர்கள் அனுமதி தந்த பின்னர் அந்த வெற்றிடங்களுக்கு வேலை இல்லாப் பட்டதாரிகளைப் போட்டிப் பரீட்சை மூலம் நியமிக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கான வேலைகளைத் துரிதபடுத்துமாறு அதிகாரிகளுக்குத் தாம் பணித்துள்ளார் எனக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர தெரிவித்தார்.

மட்டக்களப்பு பழைய கச்சேரியில் நேற்று வியாழக்கிழமை ஆளநர் மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம் அவரைச் சந்தித்து அரச நியமனங்கள் கோரி ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இதன் போது ஆளுநர் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதும் வேலையில்லாப் பட்டதாரிகள் இருக்கின்றனர். அதே வேளை நிதி அமைச்சர் அனுமதி யளித்த 375 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கியுள்ளோம். எனவே கொஞ்சம் கொஞ்சமாக அனைவருக்கும் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.உங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஜனாதிபதியிடம் கையளிப்பேன். – எனத் தெரிவித்தார்

இதேவேளை ஆளுநரைச் சந்தித்த பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவிக்கையில் – ஆளுநரிடம் பட்டதாரிகளின் கோரிக்கைகள் அடங்கிய மஜகரை வழங்கியுள்ளோம். அதன் போது கிழக்கில் 3 ஆயிரத்து 500 பட்டதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தவுள்ளார் எனவும் அதன் மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படும் எனவும் ஆளுநர் வாக்குறுதியளித்துள்ளார் என அவர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு கடத்த இருந்த உலர்ந்த இஞ்சிகள் பறிமுதல்






இராமநாதபுரம் மாவட்ட கடல் பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் ராமநாதபுரம் கடல் வழியாக இலங்கைக்கு கஞ்சா, உலர்ந்த இஞ்சி, பீடி இலை பண்டல்கள், வலி நிவாரணி மாத்திரைகள், பூச்சிக்கொல்லி மருந்து உள்ளிட்ட பொருள்கள் நாட்டு படகுகளில் சமீபகாலமாக அதிக அளவில் கடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இராமநாதபுரம் ஒருங்கிணைந்த குற்ற தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு நேற்று அதிகாலை திருப்புல்லாணி அடுத்த தோப்பு வலசை கடற்கரையிலிருந்து படகு மூலமாக உலர்ந்த இஞ்சி (சுக்கு) இலங்கைக்கு கடத்தப்பட இருப்பதாக கிடைத்த தகவல் அடிப்படையில் ஒருங்கிணைத்த குற்ற தடுப்பு பிரிவு பொலிஸார் சேதுகரையிலிருந்து தோப்புவலசை வரை கடற்கரை ஓரம் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது தோப்புவலசை கடற்கரை பகுதியில் 50 சாக்கு மூட்டைகளிர் சுமார் இரண்டு தொன் எடை கொண்ட உலர்ந்த இஞ்சி மூட்டைகள் படகில் ஏற்றுவதற்காக கடற்கரையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்துள்ளன.

இதையடுத்து உலர்ந்த இஞ்சி மூட்டைகளை பறிமுதல் செய்த பொலிஸார் அதனை திருப்புல்லாணி காவல் நிலையத்தில் ஒப்படைத்து பின்னர் இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட உலர்ந்த இஞ்சியின் மதிப்பு 10 லட்சம் இந்திய ரூபா இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எழிலக வளாகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்




தமிழகத்தில் பெரும்பாலான துறைகளின் அலுவலகங்கள் இயங்கி வரும் சென்னையிலுள்ள எழிலக வளாகத்திற்கு மர்ம நபர் ஒருவரினால் நேற்று காலை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

இதனையடுத்து எழிலக வளாகத்துக்கு விரைந்த பொலிஸார் , மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, அந்த வெடிகுண்டு மிரட்டல் போலியானது எனத் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்தினால் அப்பகுதியில் பெரும் பரபரப்பான சூழல் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியாவில் மீண்டும் பயன்பாட்டுக்கு வரும் தடை செய்யப்பட்ட சீனாவின் 36 செயலிகள்

இந்தியாவில் ஏற்கனவே தடை செய்யப்பட்ட சீனாவின் 36 செயலிகள் மீண்டும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டில் பாதுகாப்பு கருதி சீனாவின் சுமார் 267 செயலிகளுக்கு இந்தியா தடை விதித்தது.




டிக்டொக் உட்பட பல பிரபல செயலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது.

மேலும் சீனாவுடன் தொடர்புடைய ஏனைய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் செயலிகளும் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் ஏற்கனவே தடை செய்யப்பட்ட சீன செயலிகளில் சுமார் 36 செயலிகள் இந்தியாவில் மீண்டும் பயன்படுத்தப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# மியன்மாரில் இணைய மோசடி நிலையங்களிலிருந்து 260 பேர் மீட்பு

மியான்மாரில் இணைய மோசடி மையங்களிலிருந்து 260 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர் மீட்கப்பட்டு தாய்லாந்தில் உள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இரு நாடுகளின் எல்லையில் மனித கடத்தல் மற்றும் சைபர் மோசடிக்கு எதிரான தீவிர நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாய்லாந்துக்கும் மியன்மாருக்கும் இடையில் உள்ள எல்லைப் பகுதியில் சீன நாட்டவர் மோசடி நிலையங்களை நடத்திவந்துள்ளனர்.

அதில் சட்டவிரோதமாக வேலை செய்யுமாறு பல வெளிநாட்டவர் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

அவர்களில் சிலர் கடத்தப்பட்டனர், சிலர் தாங்களாக முன்வந்து வேலை செய்தனர் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மோசடி நிலையங்களிலிருந்து மீட்கப்பட்டோரைச் சோதித்து அதிகாரிகள் உரிய நாடுகளுக்கு அவர்களை அனுப்பிவைப்பர்.

தாய்லாந்து எல்லையில் உள்ள மோசடி நிலையங்கள் சீன சமூக ஊடகங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவைச் சேர்ந்த பலர் தாய்லாந்தை ஆபத்தான நாடு என்று கருதுகின்றனர்.

மோசடிக் கும்பல்களை முறியடிப்பதில் இன்னும் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும்படி தாய்லாந்திடம் சீனா கேட்டுக்கொண்டுள்ளது.

சீன நடிகர் வாங் ஜிங் ஜனவரி மாதம் மியான்மாரில் கடத்தப்பட்டுச் சிறைபிடிக்கப்பட்ட பின்னர், இறுதியில் மியாவாடியில் உள்ள மோசடி மையங்களிலிருந்து மீட்கப்பட்டதைத் தொடர்ந்து சீனாவிற்கும் மியான்மாருக்கும் இடையிலான பதற்றங்கள் அதிகரித்தன.

இந்த சம்பவத்திற்குப் பதிலளிக்கும் விதமாக, இப்பகுதியில் இயங்கும் மோசடி வலையமைப்புகளை கடுமையாக்கச் சீனா தாய்லாந்துக்கு அழுத்தம் கொடுத்திருந்தது.

# டொனால்ட் ட்ரம்ப் விதித்த காலக்கெடுவில் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் இணக்கம்



இஸ்ரேலிய பணயக்கைதிகளை திட்டமிட்டபடி எதிர்வரும் சனிக்கிழமை விடுவிக்க ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல், ஹமாஸ் இடையிலான போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணய கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டனர்.

இஸ்ரேல் தங்கள் நாட்டுச் சிறைகளில் உள்ள பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்வதற்கு இணக்கம் தெரிவித்தது.

கடந்த சனிக்கிழமை அனைத்து பணயக்கைதிகளையும் ஹமாஸ் விடுதலை செய்யாவிட்டால் காசாவில் போர் வெடிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பாக இஸ்ரேல் தரப்பில் இருந்து இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

ஹமாஸ் அமைப்பின் இந்த அறிவிப்பின் மூலம் காசாவில் போர்நிறுத்தத்திற்கு பாதிப்பு ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது.



# தாய்வானில் உள்ள வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட எரிவாயு வெடிப்பில் ஐவர் பலி

தாய்வானில் உள்ள வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட எரிவாயு வெடிப்பில் ஐந்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தாய்வானின் மத்திய நகரமான தைச்சுங்கில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்று இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவத்தில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

தைச்சுங்கில் உள்ள வர்த்தக நிலையத்தில் நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் 12 ஆவது மாடியில் இந்த வெடிப்பு சம்பவம் ஏற்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நிர்மாணப்பணிகள் காரணமாக 12 ஆவது மாடியில் உள்ள உணவகம் வெடிப்பு சம்பவம் ஏற்பட்ட வேளையில் மூடப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.








# இன்றைய ராசி பலன்கள் - 14.02.2025




இன்று உங்கள் தைரியம் குறைந்து காணப்படும். என்றாலும் நம்பிக்கையுடனும் ஜாலியாகவும் இருங்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப்படாது. அவர்களால் சில பிரச்சினைகள் உருவாகலாம்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை வேண்டும். அது உங்கள் துணையுடன் இணக்கமான உறவுமுறை வளர்ப்பதற்கு உதவும்.

பணப்புழக்கம் குறைந்த அளவில் காணப்படும். கூடுதல் செலவினங்களை எதிர்கொள்வதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

மனஅழுத்தம் காரணமாக சோர்வு காணப்படும். முதுகு வலியின் காரணமாக பிரச்சினைகள் தோன்ற வாய்ப்பு காணப்படுகின்றது.




நீங்கள்இன்று காரியங்களை உறுதியுடனும் கவனமான முறையிலும் ஆற்ற வேண்டும். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம்.

அதிகப் பணிகள் காரணமாக உங்களால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்மையை வெளிப்படுத்துவீர்கள். சமநிலையான அணுகு முறையோடு செயற்பட்டால் நல்ல புரிந்துணர்வை உருவாக்க முடியும்.

பணப்புழக்கம் மிகவும் குறைவாக காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலை காணப்படும். தேவையற்ற அதிகமான செலவினங்கள் ஏற்பட்டு கவலைகளை அளிக்கும்

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி இருமல் போன்ற ஒவ்வாமை நோய்கள் பாதிப்பு இருக்கும்.




இன்று நீங்கள் உயரத்தை அடைவதற்கு மிகவும்அனுகூலமான நாள். உங்கள் திறமைகளை மிகவும் உறுதியுடன் வெளிப்படுத்த வாய்ப்பு நிறைந்த அற்புதமான நாள்.

உங்களுக்கு சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். பணியும் பணியிடச் சூழலும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அதனால் நீங்கள் திறம்பட செயலாற்ற முடியும்.

உங்கள் துணையிடம் எளிதான மற்றும் இலேசான அணுகுமுறையைக் கொண்டிருப்பீர்கள். இது உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

நிதிநிலைமை சீராகவும் பாதுகாப்பாகவும் காணப்படும். நல்ல சம்பாத்தியமும் அதனால் திருப்தியும் காணப்படும்.

நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். நீங்கள் திடமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்கள் வாழ்வின் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். உங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் ஆதரவு கிடைக்கும் நாள்.

நீங்கள் உங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் திறமான செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் உங்கள் வீட்டிற்கு வரும் விருந்தாளியின் வரவை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருப்பீர்கள்.

பணவரவு அதிகமாக காணப்படும். இருக்கும் பணத்தை கவனமாக முதலீடு செய்ய வேண்டும்.

ஆரோக்கியம் சிறந்து இருக்கும். உங்கள் மனதிடம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று நடைமுறைக்கு ஏற்ற மற்றும் கருத்துள்ள செயல்களில் ஈடுபடுங்கள். முன்கூட்டிய திட்டமிடல் வெற்றிக்கு வழிவகுக்கும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. சில தடைகள் காரணமாக உங்கள் பணிகளை உங்களால் தரமுள்ளதாக திறம்பட ஆற்ற இயலாது.

உங்கள் துணையின் மனநிலை மாறுபாடுகள் உங்கள் அமைதியைக் குறைக்கும். நல்லுறவை பராமரிப்பதை சற்று சவாலாகவே உணர்வீர்கள்.

குறைந்த அளவு பணப்புழக்கம் காணப்படும். குடும்பத் தேவைகளுக்காக ஏற்படும் அதிக செலவினங்களால் வருத்தப்பட நேரிடலாம்.

ஒவ்வாமை காரணமாக இருமலால் அவதிப்படுவீர்கள்




இன்று முன்னேற்றம் காணப்படாது. இன்று எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். எதையும் இலேசாக எடுத்துக்கொள்ளுங்கள். பிரார்த்தனைக்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பது கடினமாக இருக்கும். பணியில் ஏற்படும் சில சந்தேகங்கள் காரணமாக பணியில் தொய்வு இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்ள இது மிகவும் முக்கியம்.

உங்களுடைய அலட்சியப் போக்கால் பண இழப்புகள் காணப்படும்.

நடக்கும் பொழுது கீழே விழுவதற்கான வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையாக ஜாக்கிரதையாக நடக்க வேணடும்.




இன்று நம்பிக்கையான வெற்றிகரமான நாள். நீங்கள் இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் வெகுமதிகளை பெற்றுத் தரும். நீங்கள் உங்கள் பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள்.

அன்பும் அரவணைப்பும் நகைச்சுவையுடன் வெளிப்படுத்துவதன் மூலம் உங்கள் துணையுடன் நீங்கள் உறவை பலப்படுத்திக்கொள்ள முடியும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும்.உபரிப் பணத்தைக் கொண்டு உங்கள் தேவைகளை சமாளிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து விளங்கும். உங்கள் நேர்மையான போக்கு உங்கள் ஆரோக்கியத்தை சிறக்கச் செய்யும்.




இன்று உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் பரிபூரணமான நாள். மகிழ்ச்சிகரமான தருணங்கள் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் அள்ளித் தரும். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துத்தரவேண்டும் என்ற மனஅழுத்தம் காணப்படும். சகபணியாளர்களுடனான நல்லுறவு பயனளிக்கும்.

உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்க வேண்டும் என்ற உந்துதல் அதிகரிக்கும்.

சிறந்த ஆரோக்கியத்தைப் பராமரிப்பீர்கள். சிறந்த ஆற்றலுடன் துடிப்புடன் நீங்கள் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.02.2025




இன்று தடைகளை வென்று திருப்தி கரமாக இருக்கும் நாள். யோகா மற்றும் தியானம் மேற்கொண்டு கவலைகளை நீக்கி மனதை அமைதியுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

பணிகள் சம்பந்தமாக சில இடை யூறுகள் காணப்படும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் கடின உழைப்பின் மீது நம்பிக்கை வையுங்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

சந்தேக உணர்வுகள் உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்ள முயல வேண்டும்.

அதிகமான பணப்புழக்கம் இருக்காது. வரவைவிட செலவுகள் அதிகமாக இருக்கும்.

இன்று பதற்றம் காணப்படும். அது உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.




நண்பர்களின் ஆதரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் நேரத்ததை வேலையில் ஈடுபடுவதில் கழிப்பதன் மூலம் உங்கள் குறிக்கோளை அடைய முடியும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சியை அளிக்கும் உங்களுக்கு தரப்பட்ட பணிகளை அனுபவித்துச் செய்வீர்கள் என்றாலும் வெற்றி பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் போராடுவீர்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்கள் சம்பாத்தியம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிக்க முடியும்.

ஆரோக்கியம் நலல முறையில் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. நீங்கள் சவாலான சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியிருக்கும் குடும்பப் பிரச்சினைகள் மற்றும் அதிகரிக்கும் ஒப்புக் கொண்ட பொறுப்புகள் கவலையை அளிக்கும். பிரார்த்தனை செய்வதன் மூலம் மன ஆறுதல் மற்றும் பாதுகாப்பு உணர்வு பெற முடியும்.

பணிகள் சவாலானதாக இருக்கும். அதிக பணிச்சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திறம்பட திட்டமிடுவது நல்லது.

உங்கள் உணர்வுகளை வெளிப்படையாகப் பேச மாட்டீர்கள். இது அதிருப்தியை உண்டாக்கும்

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்காது. மருத்துவ சிகிச்சைக்காக நீங்கள் சில செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.




நீங்கள் பாதுகாப்பற்ற உணர்வைப் பெறுவீர்கள். அசௌகரியங்கள் ஏற்படலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணிகளைத் திட்டமிட்டுச் செய்வது பணியில் வெற்றி பெற உதவி கரமாக இருக்கும்.

முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். அதனைச் செய்வதன் மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும்.

பணப்புழக்கம் பொதுவாக குறைந்து காணப்படும். ஆரோக்கியம் சம்பந்தமாக நீங்கள் சில செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

ஆரோக்கியத்தில் அக்கறையும் கவனமும் தேவை. கால்கள் மற்றும் மூட்டுக்களில் திடீரென வலிகள் தோன்றலாம்.

### தையிட்டி விகாரை, மட்டக்களப்பு மேய்ச்சல்தரை பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும்

# சிங்கள குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும் இல்லையேல் இன, மத கலவரம் வெடிக்கும்

### ஈ.பி.டி.பி. கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அன்ரனிசில் ராஜ்குமார் எச்சரிக்கை

(கனகராசா சரவணன்)

யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை, மட்டக்களப்பு மாதவனை, மயிலத்தமடு மேய்ச்சல்தரை பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தமிழர்களுக்கு ஜனாதிபதி பெற்றுக் கொடுக்க வேண்டும். அத்துடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மேற்கொள்வதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிடில் இனங்களுக்கிடையே பாரிய முறுகல் நிலை ஏற்படும். இதனால் மீண்டும் இன, மத கலவரங்களால் இரத்தஆறு ஓடும் வாய்ப்புக்கள் உள்ளன என ஈ.பி.டி.பி. கட்சி மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அன்ரனிசில் ராஜ்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் தையிட்டி விகாரை விவகாரத்தில் எல்லா அரசியல் கட்சியினரும் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது விகாரைக்கு ஊடகவியலாளர்கள் செல்லத்குப் பொலிஸார் அனுமதியளிக்காது வீதியில் தடுத்து நிறுத்தினர்.

இனவாதம், மதவாதம் பேசக்கூடாது,




ஊடக சுதந்திரம் வேண்டும் என ஆட்சியை கைப்பற்றிய தற்போதைய அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை மறுக்கின்றதா? எங்களுக்கு சந்தேகமாக இருக்கின்றது.

ஆட்சி பீடம் ஏறும் போது ஜனாதிபதி என்ன சொல்லி நாட்டை பொறுப்பெடுத்தார்? ஊடக சுதந்திரம் தேவை என்றார். ஆனால் தையிட்டி விவகாரத்தில் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் முற்றுமுழுதாக தடுக்கப்பட்டுள்ளது எனக் கருதுகின்றோம் .

இந்த விகாரைப் பிரச்சனை நீண்ட காலமாக இடம்பெற்றுவருகின்றது. இதற்குஅரசாங்கம்முற்றுப்புள்ளிவைக்க வேண்டும். அவ்வாறே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரை விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி தமிழர்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதேவேளை தமிழர்களின் நிலங்களில் சட்டவிரோதமான சிங்கள குடியேற்றங்களை தடுக்கவேண்டும். இந்த சட்டவிரோத குடியேற்றங்களை தடுக்காது விட்டால் நிச்சயமாக இனங்களுக்கிடையே பாரிய முறுகல் நிலை ஏற்படும். இதனால் மீண்டும் இரத்தஆறு ஓடும் வாய்ப்புகள் உள்ளன.

கடந்த காலத்தில் யுத்தத்தினால் மூன்று இனங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. பொருளாதார சுமையைத் தாங்கமுடியாத நாடாக இலங்கை உள்ளது. வாழ்க்கை செலவு எகிறி விட்டது. தேங்காயின் விலை, அரிசி, உப்பின் விலைகள் சொல்லத் தேவையே இல்லை. அப்படியான நாட்டிலே மீண்டும் இனமுறுகல் ஏற்பட்டு மத, இனக் கலவரங்கள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

எனவே தமிழர்களின் நிலங்களில் சிங்களவர்களை திட்டமிட்டு குடியேற்றம் செய்வதை உடனடியாக ஜனாதிபதி தடுத்து நிறுத்தி தீர்வை பெற்றுக் கொடுக்க ஆவண செய்ய வேண்டும். இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வு, நல்லிணக்கத்தைக் கட்டியொழுப்பி, முழுமையான ஊடக சுதந்திரத்தை இலங்கை தேசத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.